17.04.2025.

**கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )**

அமர்வு வழக்கு எண். 24/2016

அ.சா.20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. செல்வி | | |
| க/பெ | சுப்பிரமணியன் (லேட்) | | |
| கிராமம் | வேலூர் | தொழில் | |
| தாலுக்கா | வேலூர் | வயது | 64/2025 |
| மாவட்டம் | வேலூர் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 12-04-2011 ஆம் தேதி நான்விழுப்புரம் மாவட்டம் கஞ்சனூர் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது, அரியலூர் திருக்கை கிராமத்தைச் சேர்ந்த ஜெயராமன் மகன் ஆறுமுகம் என்பவர் கெடார் காவல் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரை நிலைய தலைமை காவலர் 1151 திரு உத்திர மணி என்பவர் 12-04-2011 இரவு 12 மணிக்கு பெற்று, கெடார் காவல் நிலைய குற்ற எண் 71/11 இதச பிரிவு 302 -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முறையாக உரிய நீதிமன்றத்திற்கும்

பிரதிகளை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இது சம்பந்தமாக எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தும் மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பினை என்னிடம் ஒப்புவித்தார் ( அந்த தலைமை காவலர் உத்திரமணி என்பவர் இறந்துவிட்டார் அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயமாகும்). என்னிடம் காட்டப்படும் அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா. ஆ.13 ஆகும். நான் வழக்கு கோப்பினை பார்த்தும், அதை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு முதல் தகவல் அறிக்கையின்படி எங்களிடம் ஒப்புவித்த எதிரிகள் ஐயப்பன் த/பெ மூர்த்தி, ஐயப்பன் த/பெ ஏழுமலை ஆகியோர்களை மறுநாள் பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற இருந்ததால் மேற்படி ஊர் தலைவர் நாகையன் வசம் ஆஜர் முச்சலிக்கா மூலம் ஒப்புவித்து மறுநாள் என்னிடம் ஆஜர் படுத்த உத்தரவிட்டேன். ஆனால் அங்கிருந்து இருவரும் தலைமறைவு ஆகிவிட்டனர். (அன்று இரவே) 13/4/2011-ம் தேதி விடியற்காலை ஒரு மணிக்கு முதல் தகவல் அறிக்கை பெற்று, சம்பவ இடம் சென்று, நான் பார்க்கும்போது இருட்டாக இருந்ததாலும், அங்கு இருந்த பெயர் ஊர் விலாசம் தெரியாத ஒரு ஆண் நபர் சடலமாக இருந்ததை பார்வையிட்டு, அதனுடைய காயங்களை தெரிந்து கொண்டு, விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு தலைமை காவலர் மூலம் அனுப்பி வைத்தேன். சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகன் தயார் செய்ய அந்த சமயம் இயலவில்லை. அந்த இடத்தை காவலர் மூலம் யாரும் தொந்தரவு செய்யாமல் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்தேன். 13/04/2011-ம் தேதி காலை 6 மணி முதல் 8 மணி வரை அரசு மருத்துவமனையில் இருந்த பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா. ஆ.14 ஆகும். அங்கேயே சாட்சிகள் ஆறுமுகம், சிவா, உமாநாத், சண்முகம் பாஞ்சாலி, வேலு, நாகையன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். பிரேத விசாரணை முடித்து இறப்பின் மருத்துவ காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய அறிக்கை தயார் செய்து காவலர் 497 அச்சுதன் என்பவர் மூலம் உடற்கூறாய்வு செய்ய பிரேதத்தை ஒப்புவித்தேன். பிரேத பரிசோதனை முடித்து உடலை உறவினர் வசம் ஒப்புவித்தேன். பிறகு அன்று 13/04/2011 காலை 9.30 மணிக்கு பாதுகாக்கப்பட்ட சம்பவ இடத்தை சாட்சிகள் உமாநாத், வேலு ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து

கையொப்பமிட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் நான் தயார் செய்ததுதான். அது அ.சா.ஆ.15 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.16 ஆகும். அன்று பகல் 10.30 மணிக்கு சம்பவ இடத்தில் எதிரிகள் கொலை செய்ய பயன்படுத்தியதாக தெரிய வந்த ரத்தம் தோய்ந்த சுமார் 1 கிலோ 720 கிராம் எடையுள்ள கருங்கல் ஒன்றையும், ரத்தம் கலந்த மண் மற்றும் ரத்தம் கலக்காத மண் ஆகியவற்றை மகசரில் கைப்பற்றி சாட்சிகள் உமாநாத், வேலு ஆகியோரிடம் கையொப்பம் பெற்றேன். சம்பவ இடத்திற்கு எட்டு அடி தள்ளி ரத்தக்கரை படிந்த முள்வேலி தடிகள் இருந்தது கைப்பற்றி மற்றும் 3 அடி அருகில் இருந்த நெப்போலியன் பிராந்தி கோர்ட்டர் பாட்டில்கள், இரண்டு மூடிகள், ஆகியவற்றை மகசர் தயார் செய்து சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர்கள் முறையே (10:30, 11:30, 12.00 மணிக்கு தயார் செய்தவை) அ.சா.ஆ. 17, 18, 19, ஆகும். மேற்படி சம்பவ இடங்களில் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். சாட்சி ரத்தம் தோய்ந்த கருங்கல்லை சரியாக அடையாளம் காட்டினார். இந்த கருங்கல் சா.பொ.1 ஆகும். ரத்தம் தோய்ந்த மண் மற்றும் சாதாரண மண் முறையே சா.பொ. 2, 3 ஆகும். மேலும் வேலி காத்தான் முள் தடி சா.பொ.4 ஆகும். நெப்போலியன் என்ற ஆங்கிலேய எழுத்துள்ள கோர்ட்டர் பாட்டில்கள் எண்ணிக்கை 2 மற்றும் அதன் மூடிகள் எண்ணிக்கை 2 முறையே சா.பொ. 5, 6 ஆகும். 14-04-2011 ஆம் தேதி இந்த வழக்கினை தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு சம்பவத்தில் அருகில் இருந்த சாட்சிகள் காத்தவராயன், பிரகாஷ், குபேந்திரன், மணிகண்டன், முருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் அன்றே பிரேதத்தை ஒப்புவித்து வந்த காவலர் 497 அச்சுதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 15-04-2011 ஆம் தேதி இறந்த நபரான சரவணன் மனைவி வளர்மதி, மற்றும் இறந்தவரின் தங்கை நந்தினி, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 16-04 2011 ஆம் தேதி சாட்சிகள் பாலு மணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 17-04-2011 ஆம் தேதி சாட்சி ஆறுமுகம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 18-04-2011 ஆம் தேதி பகல் 2.45 மணிக்கு அரியலூர் திருக்கை முக்கியஸ்தர் ஆன நாகையன் என்பவரிடம் வந்த பின்னால் பெயர் ஊர் விலாசம் தெரிந்த ஐயப்பன் தந்தை பெயர் மூர்த்தி மற்றும்

மற்றொரு ஐயப்பன் தந்தை பெயர் ஏழுமலை ஆகியோர் போலீசார் தேடுவதாக தெரிந்து நாகையனிடம் வந்து சரண்டர் ஆனவர்களை அவர் கிராம நிர்வாக அலுவலர் பொன்னுரங்கம், மற்றும் உதவியாளர் ஜானகிராமன், ஆகியோரின் வசம் ஒப்புவித்து, அவர்கள் என்னிடம் போன் மூலம் தகவல் சொன்னது தெரிந்து பகல் 3.00 மணி அளவில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று கிராம நிர்வாக அலுவலர், மற்றும் உதவியாளர் முன்னிலையில், எதிரி தானாக எந்த வற்புறுத்தலும் துன்புறுத்தலும் இன்றி கொடுத்துக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், சாட்சிகள் மற்றும் எதிரிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் சரவணனுக்கும் தங்களுக்கும் ஏற்பட்ட விரோதம் மற்றும் அவரை கொலை செய்த விவரங்களை எதிரிகள் கூறினார்கள். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் என்னை அழைத்து சென்றால் கொலை செய்ய பயன்படுத்திய தடியை அடையாளம் காட்டுவதாக கூறினார்கள்( ஏற்கனவே அந்த தடி சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது). சம்பவ இடத்திற்கு கூட்டிச் சென்று கொலை செய்த விவரம் குறித்து எதிரிகள் சம்பவ இடத்தை காட்டியதை வீடியோ பதிவு செய்தும் முடித்து 17.00 மணிக்கு இருவரையும் காவல் நிலையம் அழைத்து வந்து இரவு 20.00 மணிக்கு நிலையத்தில் ஒப்புவித்து அன்றே நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 19-04-2011 ஆம் தேதி மகசரில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றம் ஒப்புவித்தோம். சிறப்பு உதவி ஆய்வாளர் துரைராஜ் என்பவரை நியமித்து ஆய்வுக்கு அனுப்பி ஆய்வறிக்கை பெற நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தேன். 20-04-2011 ஆம் தேதி சாட்சிகள் ஆறுமுகம், சிவா, உமாநாத், சண்முகம், பாஞ்சாலி, வேலு, நாகையன், இவர்களையும், நீதிமன்ற காவலில் இருந்த எதிரிகள் ஐயப்பன் த/பெ ஏழுமலை, ஐயப்பன் த/பெ மூர்த்தி ஆகியோரிடம் இருந்து பிரிவு 164 கு. வி.மு.ச படி வாக்குமூலம் பதிவு செய்ய விழுப்புரம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவர் சாட்சிகளின் வாக்குமூலத்தை பதிவு செய்ய வானூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும், எதிரிகளின் வாக்குமூலம் பதிவு செய்ய திண்டிவனம் நீதித்துறை நடுவரிடமும் ஒப்படைக்க உத்தரவிட்டார். அதன் பேரில் 09-05-2011 ம் தேதி எதிரிகளை திண்டிவனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினேன். நீதித்துறை நடுவர் வாக்குமூலம் பதிவு செய்தார். 23-05-2011 ம் தேதி சாட்சிகளை வானூர் நீதித்துறை நடுவர்

நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். அங்கு நீதித்துறை நடுவர் வாக்குமூலம் பதிவு செய்தார். ஐயப்பன் த/பெ மூர்த்தி (1ம் எதிரி) என்பவரது பிரிவு 164 கு.வி.மு.ச படியான வாக்குமூலம் அ.சா.ஆ.20 ஆகும். ஐயப்பன் த/பெ ஏழுமலை (2ம் எதிரி) என்பவரது பிரிவு 164 கு.வி.மு.ச படியான வாக்குமூலம் அ.சா.ஆ.21 ஆகும். சாட்சி ஆறுமுகம் என்பவரின் பிரிவு 164 கு.வி.மு.ச படியான வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாட்சி சிவா என்பவரின் பிரிவு 164 கு.வி.மு.ச படியான வாக்குமூலம் அ.சா.ஆ.22 ஆகும். சாட்சி உமாநாத் என்பவரின் பிரிவு 164 கு.வி.மு.ச படியான வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாட்சி சண்முகம் என்பவரின் பிரிவு 164 கு.வி.மு.ச படியான வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாட்சி பாஞ்சாலி என்பவரின் பிரிவு 164 கு.வி.மு.ச படியான வாக்குமூலம் அ.சா.ஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாட்சி வேலு என்பவரின் பிரிவு 164 கு.வி.மு.ச படியான வாக்குமூலம் அ.சா.ஆ.23 ஆகும். சாட்சி நாகையன் என்பவரின் பிரிவு 164 கு.வி.மு.ச படியான வாக்குமூலம் அ.சா.ஆ.24 ஆகும். நான் மேலே சொன்ன சான்று பொருட்களை அனுப்பியதற்கான படிவம் 95-கள் முறையே (13-04-2011ம் தேதி 10.30 மணி, 11.30 மணி, 12.00 மணி) அ.சா.ஆ. 25, 26, 27 ஆகும். அதன் பிறகு நான் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு மாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பினை காவல் நிலையத்திற்கு ஒப்புவித்து சென்றேன். சாட்சிகள் நாகையன் என் விசாரணையில் எதிரிகள் காவல் நிலையத்திலிருந்து தப்பித்து சென்றதை பிடித்து வந்து ஒப்படைத்தது பற்றியும், கு.வி.மு.ச 164 படி வாக்குமூலம் அளித்ததை பற்றியும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி பொன்னுரங்கம் ஒன்றாம் எதிரி ஐயப்பன் கொடுத்துக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன் என்றும், சாட்சி காத்தவராயன் சம்பவம் பற்றியும், எதிரிகளைப் பிடித்து வந்தது பற்றியும், மூவரைத் தவிர வேறு யாரும் அங்கிருந்து ஓடவில்லை என்றும் வாக்குமூலம் மற்றும் மறுவாக்குமூலம் கொடுத்துக் கொண்டது பற்றியும், சாட்சி பாபு எதிரி அன்பு சரவணன் என்பவரின் வீட்டில் தங்கி இருந்தது பற்றியும், 12-04-2011 ஆம் தேதி மாலை அன்பவும் சரவணனும் தன் வீட்டில் இருந்து சென்றதைப் பற்றியும்,என் விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். மேலும் சாட்சி ஜானகிராமன் என்பவர் என் விசாரணையில், ஒன்றாம் எதிரி

ஐயப்பன் கொடுத்துக்கொண்ட ஒப்புதல் வாக்கு மூலத்தில் உடனிருந்து கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

## <u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு புகாரை யார் எழுதினார்கள் என்று தெரியாது. புகாரில் உள்ள கையெழுத்து தலைமை காவலரின் கையெழுத்து இல்லை. இந்த புகாரை யார் எழுதினார்கள் என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை. புகாரை அளித்தவரிடமாவது நான் விசாரித்தேனா என்றால் இல்லை. புகாரில் கிழக்கு பக்கமாக இரண்டு பேர் ஓடினார்கள் என்றும், மேற்கு பக்கமாக சிலர் ஓடினார்கள் என்றும் உள்ளது என்றால் சரிதான். எதிரிகளை நாங்கள் பிடிக்கவில்லை. நாகையன் மற்றும் புகார்தாரர் ஆறுமுகம் ஆகியோர் கொண்டு வந்து ஒப்படைத்தார்கள். புகாரில் அவர்கள் பிடித்து வந்த இரண்டு எதிரிகளை சந்தேக நபர்கள் என்றுதான் குறிப்பிட்டுள்ளார்கள். நாங்கள் இந்த வழக்கில் கு.வி.மு.ச 174-ன்படி சந்தேக மரணம் என்று முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் 24 மணி நேரம் சந்தேகத்தின் பேரில் எதிரிகளை வைத்திருக்கலாம் என்றால் சரிதான். நான் அன்று இரவு 1.00 மணிக்கு புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். நாகையனிடம் 2 எதிரிகளை ஒப்படைத்த போது நேரம் என்ன இருக்கும் என்றால், 1.30 மணி இருக்கும். நான் தான் இரண்டு எதிரிகளை நாகையன் வசம் ஒப்படைத்தேன். அந்த ஆவணத்தில் யார் நாகையனிடம் எதிரிகளை ஒப்படைத்தார்கள் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். நான் எதிரிகளைப் பிடித்த நான்கைந்து பேர்களை விசாரிக்கும் போது நாங்கள் எதிரிகளை சந்தேகத்தின் பேரில் பிடித்தோம் என்று சொன்னார்களே தவிர, வேறு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அன்று இரவு வரையில் இரண்டு எதிரிகளைப் பிடித்த நான்கைந்து பேர்களுக்கு வேறு எந்த விவரமும் தெரியாது என்றால், சரிதான். அவர்களுக்கு அப்போது குற்ற நோக்கம் பற்றி தெரியாது. அந்த நான்கைந்து நபர்கள் காலை 6:00 மணிக்கு நான் விசாரிக்கும் போது குற்ற நோக்கம் பற்றி என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த நான்கைந்து நபர்கள் அவர்களிடம் எதிரிகளை ஒப்படைத்த போது விசாரணை செய்திருக்கலாம். என் முன்னிலையில் அவர்கள் விசாரணை

செய்யவில்லை. எனக்கு அந்த நான்கைந்து நபர்களுக்கு எப்படி குற்ற நோக்கம் தெரியும் என்று தெரியாது. மேற்கு பக்கம் ஓடிய நான்கைந்து நபர்களை கண்டுபிடிக்க நான் என்னென்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால், தற்போது ஞாபகம் இல்லை. நாங்கள் தனிப்படை அமைத்து தேடினோம். ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த 5 சாட்சிகளுமே மேற்கு பக்கம் சில பேர் ஓடினார்கள் கிழக்கு பக்கம் 2 பேர் ஓடினார்கள் என்று தங்களது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த 5 பேரையுமே விசாரித்த போது, ஏன் அப்படி சொன்னீர்கள் என்று காரணம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. சம்பவத்தை யாரும் நேரில் பார்க்கவில்லை என்பதால், எந்த ஆயுதத்தை வைத்து சம்பவம் நடந்தது என்பதை சொல்ல முடியாது என்றும், சம்பவ இடத்தில் பிரேதத்தின் அருகில் இருந்த ஆயுதங்களை வைத்து அதனால் தான் சம்பவம் நடந்திருக்கும் என்று முடிவிற்கு வந்தோம் என்றும் சொன்னால் சரிதான். சந்தேக நபர்களை பிடித்து வந்தபோது அவர்களது உடையில் ரத்தக்கறை இருந்ததா என்பது தற்போது எனக்கு நினைவில்லை.  கைப்பற்றுதல் மகசரில் யார், யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால், உமாநாத் மற்றும் வேலு கையெழுத்து போட்டுள்ளார்கள். மூன்று கைப்பற்றுதல் மகசர்களிலும் அவர்கள் தான் கையெழுத்து போட்டுள்ளார்கள். பார்வை மகசர்களிலும் அவர்கள் தான் கையெழுத்து போட்டுள்ளார்கள். அந்த இரண்டு எதிரிகளையும் நாகையனிடம் ஒப்படைத்த பிறகு எப்போது நான் அவர்களை திரும்ப பார்த்தேன் என்றால், கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் அளித்தபோதுதான் பார்த்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் நாகையன் வீட்டில் இரண்டு எதிரிகள் இருக்கும் போது, அங்கு கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் சென்றதாகவும், நானும் கேள்விப்பட்டு நாகையன் வீட்டின் எதிரில் சென்றதாகவும் உள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் நாகையன் வீட்டில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலருக்கு காவல் நிலையத்திலிருந்து நான் எந்த தகவலும் அளிக்கவில்லை என்றால் சரிதான். நாகையனும் எனக்கு தகவல் எதுவும் சொல்லவில்லை. கிராம நிர்வாக அலுவலர்தான் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். கிராம நிர்வாக அலுவலர் தனது சாட்சியத்தில் அவர் முதன்முதலில் இரண்டு எதிரிகளை எங்களது காவல் நிலையத்தில் பார்த்ததாகவும், அவருக்கு எதிரிகள் யாரென்று தெரியாது என்றும், நாங்கள் காவல் நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்த

ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையெழுத்து செய்ததாகவும், சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் இறந்தவரின் தங்கையை விசாரித்த போது அவர் தனது வாக்கு மூலத்தில் மூன்றாவது எதிரியும், இறந்தவரும் ராக்கி ரமேஷ் என்பவரிடம் வேலை செய்து வந்ததாகவும் அப்போது அவர்களுக்குள் முன்விரோதம் இருந்ததாகவும், அதனால் இந்த சம்பவம் நடந்ததாகவும், சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ராக்கி ரமேஷ் சாராயம் கடத்துபவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் மீது நிறைய கொலை வழக்குகள் உள்ளது என்றால் இருக்கலாம். அவரிடம் இந்த வழக்கில் இறந்த நபர் வேலை செய்திருக்கிறார் என்று அவரது தங்கை கூறியுள்ளார் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், ராக்கி ரமேஷ் என்பவரிடம் இறந்த நபர் வேலை செய்தபோது பல கொலை சம்பவங்களில் அவருடன் சேர்ந்து ஈடுபட்டுள்ளார் என்றும், அதனால் பாதிக்கப்பட்ட யாரோ தான் அவரை கொலை செய்துள்ளார்கள் என்றும், சொன்னால் சரியல்ல. மேற்கு பக்கம் ஓடிய சில நபர்கள் அவர்கள்தான் என்றும் நான் அவர்களை எனது புலன் விசாரணையில் கண்டுபிடிக்காமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் அதற்கு எந்த முயற்சியும் எடுத்ததாக எங்களது காவல் நிலைய சிடி பைலில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்தை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்தேனா என்றால், எடுத்தேன். காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். அவ்வாறு எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் இரண்டு எதிரிகளை இரவில் ஒப்படைத்தபோது சந்தேகம் எதுவும் வரவில்லை என்றால், சந்தேகம் இருந்தது ஆனால் அன்று தேர்தல் பணியின் காரணமாக உடனடியாக அவர்களை விசாரணை செய்ய இயலவில்லை. நான் எந்த சாட்சியின் அடிப்படையில் எதிரிகள் தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்ற முடிவிற்கு வந்தேன் என்றால், எதிரிகள் கிராம நிர்வாக அலுவலரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததை வைத்து தான் அவர்கள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று முடிவுக்கு வந்தேன். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படும் இடத்தில் நிறைய பொதுமக்கள் இருந்தார்கள் என்றும் நான் நினைத்திருந்தால் பொதுமக்களை சாட்சியாக போட்டிருக்கலாம் என்றும் ஆனால் வேண்டுமென்றே அரசு ஊழியரை சாட்சியாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக வழக்கு நிற்க வேண்டும் என்பதற்காக பொய்யாக கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை தவிர

என் விசாரணையில் வேறு எந்த வகையிலும் எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரியவில்லை என்றால், மற்ற சாட்சிகள் சந்தேக நபர்கள் என்று தான் சொல்லியுள்ளார்கள். நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அப்பாவிகளை எதிரிகளாக நிர்ணயித்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தில் ஈடுபட்டுள்ள குழு மிகவும் பெரிய ஆபத்தான குழு என்பதால் அவர்களை வேண்டுமென்றே நான் விசாரிக்காமல் விட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

## 3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் மொத்தம் எத்தனை சாட்சிகளை விசாரணை செய்தேன் என்று கூற முடியுமா என்றால், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 18 வரையிலானவர்களை விசாரணை செய்துள்ளேன். இந்த வழக்கைப் பற்றிய முழு விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சிகள் ஆறுமுகம், சிவா, உமாநாத், சண்முகம், பாஞ்சாலி, வேலு, நாகையன், காத்தவராயன், பிரகாஷ், குபேந்திரன், பாபு, மணிகண்டன், முருகன், அச்சுதன், நந்தினி, வளர்மதி, பொன்னுரங்கம், ஜானகிராமன், ஆகியோர்களை விசாரணை செய்தேன். நான் மொத்தம் 18 சாட்சிகளை விசாரணை செய்துள்ளேன். நான் 18 சாட்சிகளை மட்டுமே விசாரித்துள்ளேன் என்றும், மேற்கொண்டு சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றும், அதனால் எனக்கு வழக்கை பற்றி முழுமையாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியமளிக்கும் போது எதிரிகள் காவல் நிலையத்தில் சரண்டர் ஆனார்கள் என்றும், நான் அவர்களை அழைத்தபோது அவர்கள் காவல் நிலையத்தில் வந்து பார்த்த பிறகு தான் அவர்கள் யார் என்று கிராம நிர்வாக அலுவலருக்கு தெரியவந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றால், அது சரியல்ல. அவர் எதற்காக அப்படி கூறினார் என்று தெரியவில்லை. இந்த வழக்கு விஷயமாக கிராம நிர்வாக அலுவலரோ, அல்லது கிராம உதவியாளரோ, என்னை காவல்நிலையத்தில் வந்து சந்தித்துள்ளார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக அவர்கள் வரவில்லை. எனக்கு பிரேத பரிசோதனை அறிக்கை குறித்து தெரியாது. நான் பிரேத பரிசோதனை அறிக்கை வாங்கவில்லை. நான் பிரேத விசாரணை அறிக்கை வரை செய்துள்ளேன். நான் இந்த

வழக்கில் மூன்றாம் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு புகாரை யார் எழுதினார்கள் என்று தெரியாது. புகாரில் உள்ள கையெழுத்து தலைமை காவலரின் கையெழுத்து இல்லை. இந்த புகாரை யார் எழுதினார்கள் என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை. புகாரை அளித்தவரிடமாவது நான் விசாரித்தேனா என்றால் இல்லை. புகாரில் கிழக்கு பக்கமாக இரண்டு பேர் ஓடினார்கள் என்றும், மேற்கு பக்கமாக சிலர் ஓடினார்கள் என்றும் உள்ளது என்றால் சரிதான். எதிரிகளை நாங்கள் பிடிக்கவில்லை. நாகையன் மற்றும் புகார்தாரர் ஆறுமுகம் ஆகியோர் கொண்டு வந்து ஒப்படைத்தார்கள். புகாரில் அவர்கள் பிடித்து வந்த இரண்டு எதிரிகளை சந்தேக நபர்கள் என்றுதான் குறிப்பிட்டுள்ளார்கள். நாங்கள் இந்த வழக்கில் கு.வி.மு.ச 174-ன்படி சந்தேக மரணம் என்று முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் 24 மணி நேரம் சந்தேகத்தின் பேரில் எதிரிகளை வைத்திருக்கலாம் என்றால் சரிதான். நான் அன்று இரவு 1.00 மணிக்கு புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். நாகையனிடம் 2 எதிரிகளை ஒப்படைத்த போது நேரம் என்ன இருக்கும் என்றால், 1.30 மணி இருக்கும். நான் தான் இரண்டு எதிரிகளை நாகையன் வசம் ஒப்படைத்தேன். அந்த ஆவணத்தில் யார் நாகையனிடம் எதிரிகளை ஒப்படைத்தார்கள் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். நான் எதிரிகளைப் பிடித்த நான்கைந்து பேர்களை விசாரிக்கும் போது நாங்கள் எதிரிகளை சந்தேகத்தின் பேரில் பிடித்தோம் என்று சொன்னார்களே தவிர, வேறு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அன்று இரவு வரையில் இரண்டு எதிரிகளைப் பிடித்த நான்கைந்து பேர்களுக்கு வேறு எந்த விவரமும் தெரியாது என்றால், சரிதான். அவர்களுக்கு அப்போது குற்ற நோக்கம் பற்றி தெரியாது. அந்த நான்கைந்து நபர்கள் காலை 6:00 மணிக்கு நான் விசாரிக்கும் போது குற்ற நோக்கம் பற்றி என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த நான்கைந்து நபர்கள் அவர்களிடம் எதிரிகளை ஒப்படைத்த போது விசாரணை செய்திருக்கலாம். என் முன்னிலையில் அவர்கள் விசாரணை செய்யவில்லை. எனக்கு அந்த நான்கைந்து நபர்களுக்கு எப்படி குற்ற நோக்கம் தெரியும் என்று தெரியாது. மேற்கு பக்கம் ஓடிய நான்கைந்து நபர்களை கண்டுபிடிக்க நான் என்னென்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால், தற்போது ஞாபகம் இல்லை. நாங்கள் தனிப்படை அமைத்து தேடினோம். ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த 5 சாட்சிகளுமே மேற்கு பக்கம் சில பேர் ஓடினார்கள் கிழக்கு பக்கம் 2 பேர்

ஓடினார்கள் என்று தங்களது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த 5 பேரையுமே விசாரித்த போது, ஏன் அப்படி சொன்னீர்கள் என்று காரணம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. சம்பவத்தை யாரும் நேரில் பார்க்கவில்லை என்பதால், எந்த ஆயுதத்தை வைத்து சம்பவம் நடந்தது என்பதை சொல்ல முடியாது என்றும், சம்பவ இடத்தில் பிரேதத்தின் அருகில் இருந்த ஆயுதங்களை வைத்து அதனால் தான் சம்பவம் நடந்திருக்கும் என்று முடிவிற்கு வந்தோம் என்றும் சொன்னால் சரிதான். சந்தேக நபர்களை பிடித்து வந்தபோது அவர்களது உடையில் ரத்தக்கறை இருந்ததா என்பது தற்போது எனக்கு நினைவில்லை. கைப்பற்றுதல் மகசரில் யார், யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால், உமாநாத் மற்றும் வேலு கையெழுத்து போட்டுள்ளார்கள். மூன்று கைப்பற்றுதல் மகசர்களிலும் அவர்கள் தான் கையெழுத்து போட்டுள்ளார்கள். பார்வை மகசர்களிலும் அவர்கள் தான் கையெழுத்து போட்டுள்ளார்கள். அந்த இரண்டு எதிரிகளையும் நாகையனிடம் ஒப்படைத்த பிறகு எப்போது நான் அவர்களை திரும்ப பார்த்தேன் என்றால், கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் அளித்தபோதுதான் பார்த்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் நாகையன் வீட்டில் இரண்டு எதிரிகள் இருக்கும் போது, அங்கு கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் சென்றதாகவும், நானும் கேள்விப்பட்டு நாகையன் வீட்டின் எதிரில் சென்றதாகவும் உள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் நாகையன் வீட்டில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலருக்கு காவல் நிலையத்திலிருந்து நான் எந்த தகவலும் அளிக்கவில்லை என்றால் சரிதான். நாகையனும் எனக்கு தகவல் எதுவும் சொல்லவில்லை. கிராம நிர்வாக அலுவலர்தான் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். கிராம நிர்வாக அலுவலர் தனது சாட்சியத்தில் அவர் முதன்முதலில் இரண்டு எதிரிகளை எங்களது காவல் நிலையத்தில் பார்த்ததாகவும், அவருக்கு எதிரிகள் யாரென்று தெரியாது என்றும், நாங்கள் காவல் நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையெழுத்து செய்ததாகவும், சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் இறந்தவரின் தங்கையை விசாரித்த போது அவர் தனது வாக்கு மூலத்தில் மூன்றாவது எதிரியும், இறந்தவரும் ராக்கி ரமேஷ் என்பவரிடம் வேலை செய்து வந்ததாகவும் அப்போது அவர்களுக்குள் முன்விரோதம் இருந்ததாகவும், அதனால் இந்த சம்பவம் நடந்ததாகவும், சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ராக்கி ரமேஷ் சாராயம் கடத்துபவர் என்று

கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் மீது நிறைய கொலை வழக்குகள் உள்ளது என்றால் இருக்கலாம். அவரிடம் இந்த வழக்கில் இறந்த நபர் வேலை செய்திருக்கிறார் என்று அவரது தங்கை கூறியுள்ளார் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், ராக்கி ரமேஷ் என்பவரிடம் இறந்த நபர் வேலை செய்தபோது பல கொலை சம்பவங்களில் அவருடன் சேர்ந்து ஈடுபட்டுள்ளார் என்றும், அதனால் பாதிக்கப்பட்ட யாரோ தான் அவரை கொலை செய்துள்ளார்கள் என்றும், சொன்னால் சரியல்ல. மேற்கு பக்கம் ஓடிய சில நபர்கள் அவர்கள்தான் என்றும் நான் அவர்களை எனது புலன் விசாரணையில் கண்டுபிடிக்காமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் அதற்கு எந்த முயற்சியும் எடுத்ததாக எங்களது காவல் நிலைய சிடி பைலில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்தை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்தேனா என்றால், எடுத்தேன். காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். அவ்வாறு எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் இரண்டு எதிரிகளை இரவில் ஒப்படைத்தபோது சந்தேகம் எதுவும் வரவில்லை என்றால், சந்தேகம் இருந்தது ஆனால் அன்று தேர்தல் பணியின் காரணமாக உடனடியாக அவர்களை விசாரணை செய்ய இயலவில்லை. நான் எந்த சாட்சியின் அடிப்படையில் எதிரிகள் தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்ற முடிவிற்கு வந்தேன் என்றால், எதிரிகள் கிராம நிர்வாக அலுவலரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததை வைத்து தான் அவர்கள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று முடிவுக்கு வந்தேன். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படும் இடத்தில் நிறைய பொதுமக்கள் இருந்தார்கள் என்றும் நான் நினைத்திருந்தால் பொதுமக்களை சாட்சியாக போட்டிருக்கலாம் என்றும் ஆனால் வேண்டுமென்றே அரசு ஊழியரை சாட்சியாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக வழக்கு நிற்க வேண்டும் என்பதற்காக பொய்யாக கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை தவிர என் விசாரணையில் வேறு எந்த வகையிலும் எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரியவில்லை என்றால், மற்ற சாட்சிகள் சந்தேக நபர்கள் என்று தான் சொல்லியுள்ளார்கள். நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அப்பாவிகளை எதிரிகளாக நிர்ணயித்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தில் ஈடுபட்டுள்ள குழு மிகவும் பெரிய ஆபத்தான குழு என்பதால் அவர்களை வேண்டுமென்றே நான் விசாரிக்காமல் விட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் ஒப்புதல் வாக்குமூலத்தை வைத்து மட்டுமே இந்த வழக்கில் எதிரிகள்தான் குற்றவாளிகள் என்ற முடிவிற்கு வந்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆயுதங்களை பொறுத்தவரையில் நான் என்ன நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேனோ அதைப் பொறுத்து மட்டுமே சாட்சியம் கூறுகிறேன் என்றும், இதைத் தவிர்த்து வேறு ஆயுதங்களை என்னால் கைப்பற்ற இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்தவரின் உடலில் ஏற்பட்ட கொடுங்காயங்களை ஏற்படுத்துவதற்கு தற்போது வழக்கில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருட்கள் மட்டும் போதுமானது அல்ல என்றும், அந்த அளவிற்கு இறந்தவருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் விசாரித்த சாட்சிகள் தங்களது வாக்குமூலத்தில் நிறைய நபர்கள் இந்த சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள் என்றும், அவ்வாறுதான் ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். மூன்றாம் எதிரியை பொருத்தவரையில் அவர் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும் அதனால் தான் நான் அவரை கைது செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சரியாக புலன் விசாரணை செய்யாததால் மூன்றாம் எதிரி பாதிக்கப்பட்டு, குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**<u>இல்லை</u>**